dti

# தேசிய குறைந்தபட்ச ஊதியம்

## ஊழியர்களுக்கான சிறு கையேடு

அக்டோபர் 2005-இல் திருத்தியமைக்கப்பட்டது

குறைந்தபட்ச ஊதியம் குறித்து உங்களுக்கு ஏதாவது தகவல் தேவைப்பட்டாலோ அல்லது உங்களுக்கு குறைந்த ஊதியமே கொடுக்கப்படுவதாக நீங்கள் எண்ணினாலோ **0845 6000 678** என்ற குறைந்தபட்ச ஊதிய, உதவிதொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளவும்.

உங்கள் முதன்மை மொழி ஆங்கிலமாக இல்லாதபோது. உங்கள் நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்கள் சார்பாக அழைக்கலாம், அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் நீங்கள் பேசுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துகொடுக்கிறோம்.

“அனைவருக்கும் வளம்” என்னும் நம்முடைய லட்சியத்தை அடைவதற்காக, DTI, யூ.கே.வில் வியாபார வெற்றிக்கான சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது. மக்கள் மற்றும் நிறுவனங்களை, மேலும் பலனளிக்கக்கூடியதாக மாற்ற தொழில்முறைகளில், புதுப்பித்தல்களில் மற்றும் படைப்பாற்றல்களில் ஊக்கமளித்து உதவுகின்றோம்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் யூ.கே.வின் வியாபாரத்திற்காக நாங்கள் போராடுகிறோம். நாங்கள் உலக தரம் வாய்ந்த விஞ்ஞானம் மற்றும் தொழிற்துறையில் அதிக முதலீடு செய்கிறோம். தொழிலாளர் மற்றும் நுகர்வோரின் உரிமைகளை நாங்கள் பாதுகாக்கிறோம். மேலும் நாங்கள், யூகே. ஐரோப்பா மற்றும் உலகிலுள்ள நியாயமான மற்றும் திறந்த வியாபாரங்களுக்கு துணை நிற்கிறோம்.

# தேசிய குறைந்தபட்ச ஊதியம் என்பது என்ன?

குறைந்தபட்ச ஊதியம் என்பது ஒரு சட்ட உரிமை. அது யூ.கே.விலுள்ள அனைத்து தொழிலாளர்களையும் உள்ளடக்கியது. அது ஏப்ரல் 1, 1999 அன்று யூ.கே.வின் சட்டமானது.

**அக்டோபர் 1, 2005** அன்று குறைந்தபட்ச ஊதியத்தின் முக்கிய விகிதம் மணிக்கு £4.85லிருந்து மணிக்கு £5.05 ஆக உயர்த்தப்பட்டது. முக்கிய விகிதம் ஒரு தொழிலாளியின் 22ஆம் பிறந்த நாளிலிருந்து பொருந்துகிறது.

**அக்டோபர் 1, 2005** அன்று, 18 முதல் 21 (உள்ளடங்கலான) வயதுடைய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தின் இளைஞர் விகிதம் மணிக்கு £4.10 லிருந்து மணிக்கு £4.25 ஆக உயர்த்தப்பட்டது.

**அக்டோபர் 1, 2004** அன்று, கட்டாய பள்ளி வயதை முடிவுற்ற 18 வயதுக்குட்பட்ட தொழிலாளர்களுக்கு ஒரு புதிய விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விகிதம் மணிக்கு £3.00.

நீங்கள் 22 வயதும் அதற்கும் மேற்பட்டவருமாக இருந்து ஒரு புதிய நிர்வாகத்தில் புதிய வேலையில் சேருபவராக இருந்து, மேலும் உங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அளிக்கப்படுவதாக இருந்தால், அக்டோபர் 1, 2005 முதல், உங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட முதல் 6 மாதத்திற்கு மணிக்கு குறைந்தபட்சம் £4.25 (முன்னர் £4.10) அளிக்கப்படவேண்டும். இச்சூழலில், நீங்கள் உங்கள் நிர்வாகியுடன், அந்த 6 மாத காலத்தில் குறைந்தது உங்களுக்கு 26 நாட்களாவது பயிற்சி அளிக்கவேண்டிய அவரின் பொறுப்பு பற்றிய ஒப்பந்தத்திற்கு வந்திருப்பீர்கள். எவ்வகையான பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றிய மேலும் விவரங்களுக்கு 0845 6000 678 என்ற குறைந்தபட்ச ஊதிய, உதவிதொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளுங்கள்.

# அது எனக்கு பொருந்துமா?

வீட்டு தொழிலாளர்கள், ஏஜென்சி தொழிலாளர்கள், கமிஷன் தொழிலாளர்கள், பகுதி நேர தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் துண்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் உள்ளடக்கிய யூ.கே.யின் பெரும்பாலான தொழிலாளர்கள், குறைந்தபட்ச ஊதியத்திற்கு தகுதிப்பெறுவர்.

# எது ஊதியமாக கணக்கிடப்படுகிறது?

நீங்கள் ஒவ்வொரு வாரமும் அல்லது மாதமும் பெறும் அனைத்து பணமும் ஊதியமாக கணக்கிடப்படாதபோது, நீங்கள் பெறும் ஊதியம் குறைந்தபட்ச ஊதியத்திற்குள் அடங்கியுள்ளதா என பரிசோதிக்க எண்ணுவீர்கள். ஊக்கத்தொகைகள், மிகை ஊதியங்கள் மற்றும் செயல் சார்ந்த ஊதியங்கள் குறைந்தபட்ச ஊதியத்திற்கான ஊதியமாக கணக்கிடப்படுகிறது. உங்கள் அடிப்படை ஊதியத்தில் சேர்க்கப்படாத பிராந்திய உதவித்தொகை போன்ற உதவித்தொகைகள் கணக்கிடப்படாது. கூடுதலான பணி மற்றும் பணிமுறை மாற்றுகளுக்கு கிடைக்கக்கூடிய அடிப்படை விகிதத்திற்கும் மேல் வரும் கூடுதலான வருமானமும் கணக்கிடப்படாது.

சீருடை, உணவு அல்லது தனியார் உடல் காப்பீடு போன்ற பொருள் ஆதாயங்கள் கணக்கில் வராது. பொருள் ஆதாயங்களில் தங்கும் வசதி மட்டுமே கணக்கில் வரக்கூடியது. குறைந்தபட்ச ஊதியத்தில் கணக்கிடக்கூடிய தங்கும் வசதியின் மதிப்பை கணக்கிட பிரத்தியேகமான விதிமுறைகள் இருக்கின்றன.

ஊதியத்தில் கணக்கிடக்கூடியவைகள் மற்றும் கணக்கிடப்படாதவைகள் பற்றிய முழு பட்டியலுக்கு 0845 6000 678 என்ற குறைந்தபட்ச ஊதிய, உதவிதொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளுங்கள்.

## எது மணி கணக்காக கணக்கிடப்படுகிறது?

உங்கள் நிர்வாகி உங்களுக்கு மணி கணக்கில் கணக்கிட்டு, அளிக்கவேண்டிய குறைந்தபட்ச ஊதியம். நீங்கள் செய்யக்கூடிய வேலையின் தன்மையைப் பொறுத்து, வெவ்வேறாக கணக்கிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட நான்கு வகை பணிகள் இருக்கின்றன.

- ஒரு குறிப்பிட்ட மணிநேரத்திற்கோ அல்லது குறிப்பிட்ட கால அளவிற்காக உங்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டால், நீங்கள் நேர பணி செய்கிறீர்கள்;
- ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட அளவு அடிப்படை மணிநேரங்களில் பணி செய்து அதற்கு உபகாரமாக வருட சம்பளத்தை சமமான தவணை முறையில் (உதாரணமாக ஒவ்வொரு வாரமும் அல்லது ஒவ்வொரு மாதமும்) பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம் இருப்பின். நீங்கள் மணிக்கு - சம்பளம் பணி செய்கிறீர்கள்;
- நீங்கள் தயாரிக்கும் துண்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லது நீங்கள் செய்யக்கூடிய பணியின் அடிப்படையில் உங்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டால் நீங்கள் பொருள் (உற்பத்தி) அளவு பணி செய்கிறீர்கள். நீங்கள் பொருள் (உற்பத்தி) அளவு தொழிலாளராக இருந்தால் உங்களுக்கு "நியாயமான துண்டுகளின் மதிப்பீடு" வகையில் அல்லது பணிசெய்த ஒவ்வொரு மணிக்கான குறைந்தபட்ச ஊதிய முறையில் உங்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும்;
- நீங்கள் குறிப்பிட்ட வேலைகள் பலவற்றை செய்யவேண்டியிருக்கும், ஆனால் எந்த குறிப்பிட்ட காலவரையறையும் இல்லாமலிருந்தால், நீங்கள் வரையறுக்கப்பெறாத பணி செய்கிறீர்கள். நீங்கள் உங்கள் நிர்வாகத்துடன், ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்கும் ஒரு எழுத்து வடிவிலான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள உங்களுக்கு ஒரு விருப்பத் தேர்வு இருக்கிறது.

## எனக்கு தேசிய குறைந்தபட்ச ஊதியம் கிடைக்கின்றது என்பதை எப்படி உறுதிபடுத்துவது?

உங்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பெறுவதற்கான தகுதி உள்ளவரை, உங்கள் நிர்வாகம், உங்களை குறைவான ஊதியத்தை பெற்றுக்கொள்ளும்படி வற்புறுத்த முடியாது. நீங்கள் குறைவான ஊதியத்தை பெற்றுக்கொள்வதாக ஒத்துக்கொண்டு, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாலும் அது எந்த சட்ட பாதிப்பையும் ஏற்படுத்தாது.

குறைந்தபட்ச ஊதியத்தைவிட உங்களுக்கு குறைந்த ஊதியமே கொடுக்கப்படுவதாக நீங்கள் எண்ணினால், அதைப் பற்றி, உங்கள் பதிவேட்டில் பார்ப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது. உங்கள் கோரிக்கையை எழுத்துமூலம் கொடுக்கும்பட்சத்தில், சட்டப்படி உங்கள் நிர்வாகம் உங்கள் ஆவணங்களை 14 நாட்களுக்குள் அளிக்கவேண்டும். உங்கள் ஒப்புதலின்பேரில் இந்த கெடு நீட்டிக்கப்படலாம்.

குறைந்தபட்ச ஊதியம் குறித்து உங்களுக்கு ஏதாவது சிக்கல்களோ அல்லது கேள்விகளோ இருந்தால் அல்லது உங்களுக்கு குறைந்த ஊதியமே கொடுக்கப்படுவதாக நீங்கள் எண்ணினாலோ **0845 6000 678** என்ற குறைந்தபட்ச ஊதிய, உதவிதொலைபேசி எண்ணை தொடர்புகொள்ள வேண்டும். உங்கள் முதன்மை மொழி ஆங்கிலமாக இல்லாதபோது. உங்கள் நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்கள் சார்பாக அழைக்கலாம், அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் நீங்கள் பேசுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துகொடுக்கிறோம். அழைப்புகள் இரகசியமாய் கையாளப்படுகின்றன. மேலும் நீங்கள் விரும்பினால் அநாமதேயமாய் இருக்கலாம். ஆனால் உங்கள் குறை ஊதியங்களை, குறைந்தபட்ச ஊதிய அதிகாரிகள் உங்களுக்கு திரும்ப பெற்றுத்தரவேண்டியிருந்தால், அவர்களுக்கு உங்கள் பெயர் மற்றும் விவரங்கள் தெரிந்திருந்தால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுலபமாக இருக்கும். அடுத்த கட்டங்களில் நடவடிக்கைகளை மேற்கெள்வதற்கு உங்கள் பெயரை உங்கள் நிர்வாகத்திடம் அதிகாரிகள்

கூறவேண்டிவரும். (உதாரணத்திற்கு, நிர்வாகத்திடமிருந்து பணத்தை பெற்றுத்தர, உங்கள் சார்பாக வேலைவாய்ப்பு நடுவர்மன்றத்திற்கு போகவேண்டிய அவசியம் ஏற்பட்டால்). இதை, முதலில் உங்களிடம் தெரியப்படுத்தாமல், அவர்கள் செய்யமாட்டார்கள்.

உங்கள் வழக்கை நீங்கள் வேலைவாய்ப்பு நடுவர்மன்றத்திற்கோ அல்லது ஒரு நீதிமன்றத்திற்கோ கொண்டு செல்லலாம். இவற்றை செய்வதற்குமுன் உங்கள் உள்ளூர் குடிமக்கள் ஆலோசனை குழாமிடமோ அல்லது ஒரு ஊழியர் சங்கத்திடமிருந்தோ நீங்கள் ஆலோசனையும் பெறலாம்.

உங்கள் குறைந்தபட்ச ஊதிய உரிமைகளை நிலைநாட்டுவதில் நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும், உங்கள் நிர்வாகம் உங்களை வேலையை விட்டு நீக்குவதிலிருந்தும் உங்களை துன்புறுத்துவதிலிருந்தும். நீங்கள் சட்டப்படி பாதுகாக்கப்படுகிறீர்கள்.

## மேலும் விவரங்களை நான் எப்படி தெரிந்துகொள்வது?

குறைந்தபட்ச ஊதியம் குறித்து உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது உங்களுக்கு குறைந்த ஊதியமே கொடுக்கப்படுவதாக நீங்கள் எண்ணினாலோ **0845 6000 678** என்ற குறைந்தபட்ச ஊதிய, உதவிதொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளுங்கள். இந்த உதவி தொலைபேசி DTI யின் சார்பில் மாட்சிமைபொருந்திய ராணியின் வருவாய் மற்றும் சுங்காவினால் நடத்தப்படுகிறது.

அழைப்புகள் உள்ளூர் கட்டணத்தில் வசூலிக்கப்படும். எங்கள் சேவையின் தரத்தை உயர்த்துவதில் உதவிட, உங்கள் அழைப்பு கண்காணிக்கப்படலாம் அல்லது பதிவுசெய்யப்படலாம்.

மாற்றாக, நீங்கள், குறைந்தபட்ச ஊதிய விசாரணையின், Freepost PHQ1, Newcastle upon Tyne NE98 1ZH என்ற முகவரிக்கு எழுதலாம் அல்லது DTI யின் **http://www.dti.gov.uk/er/nmw** என்ற இணையதளத்தை (தகவல்கள் ஆங்கிலத்தில் மட்டும்) பார்க்கலாம்.

இந்த துண்டுபிரசுரம் ஆங்கிலம், வெல்ஷ், அரபிக், வங்காளம், குஜராத்தி, பஞ்சாபி, உருது, சீன மொழிகளிலும் கிடைக்கும்.

**இந்த துண்டுபிரசுரத்தில் அடங்கியுள்ள தகவல்கள் பொதுவான வழிகாட்டலை மட்டுமே அளிப்பதற்கான நோக்கமாகக் கொண்டது. இதையே முழுமையான மற்றும் அதிகாரபூர்வமான சட்ட அறிக்கையாக கொள்ளக்கூடாது.**

This guide has been produced in association with Her Majesty's Revenue and Customs.
Printed in the UK on recycled paper with a minimum HMSO score of 75.
First published Sept.2000. Department of Trade and Industry. www.dti.gov.uk/
© Crown Copyright. DTI/Pub 7984/.6k/09/05/AP. (TAMIL) URN 05/1503